M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—3 | குருகுலம், மாம்பாக்கம்; கர, புரட்டாசி; 21—9—51. | தளிர்—49

"குணநலம் சான்றோர் நலனே; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம்; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

OFFICE OF THE REGIST

இணைந்து வாழ்தல்

அன்பே சிவமென அறிவே தெய்வ
அருளே கடவுள் அறமே இறையென
அருண்மொழி ஞானியர் அறைந்தன ராதலின்
அன்பைப் பெருக்கி அறிவை விளக்கி
அருளை யாண்டுநல் லறவழி யொழுகல்
இறையடி சேரற் கேற்ற நெறியென
மன்பதை யுணர்ந்து வாழிய மன்னே;

ஏழ்நரம் பிணைத்த யாழிசை ஏய்ப்பக்
காழ்நவ மணிபதி கனகணி கடுப்பக்
கேழ்பல மலர்த்தொடை கிளியுட லன்ன

பேழ்தரும் பலமதம் பலகலை பேணி
வாழ்தலே யிணைந்து வான்புகழ் தருமென
ஆழ்ந்துநல் லறவழி அனைவரு மொழுகி
வாழிய தமிழகம் வாழிய வை கம்.

குறிப்பு:—காழ்—ஒளி; கேழ் பேழ்—பெருமை;

மு. குப்புசாமி.

எட்டும் + இரண்டும் = ?

(திரு. வே. சா. ஏகாம்பரம்)

தலைப்பைப் பார்த்ததும், இதென்ன, இதை ஒரு பொருட்டாகத் தலைப்பில் கேள்வியை வைத்து எழுதி விட்டாரே என்று எண்ணி விட வேண்டாம். எண்ணு மெழுத்துங் கற்றுத் தேர்ந்த பெரியோர் பலர், தங்களைத் தாங்களே 'எட்டு மிரண்டும் அறியாத மூடன்' என்று கூறிக்கொள்ளுகின்றனர். இக் கேள்வியையே, என்னை யொருவர் கேட்டதற்கு யானும், பத்து எனப் பளீரென்று கன்னத்தில் அறைந்தது போல் பதில் கொடுத்தேன். நெடு நாட்களுக்குப் பிறகுதான் அவ்விடை தவறென்று யானு மறிந்தேன். அப்பொழுது என் நெஞ்சம் என்னையே சுட்டது; பதட்டத்திற்கு வருந்தினேன். என்னைப் போன்றார்களுக்கு இது ஒரு எச்சரிக்கையாய் இருக்குமென்று எழுதலானேன்.

ஒரு நாள், மறை முடிபுகளை ஆய்ந்தறிந்த இரண்டு பெரியோர்களைச் சந்தித்தேன். அவ்விருவரில் ஒருவர் எனக்கு முன்பே அறிமுகமானவர். அவரும் யானுஞ் சிறிது நேரம் கருத்து ஒற்றுமையோடு உரையாடிக்கொண்டி ருந்தோம்.

பிறகு, அவர் "காயமே இதுபொய்" என்று ஆரம்பித்தார். அவர் மேற்கொண்டு முடிப்பதற்குள் யான் குறுக்கிட்டு, இல்லை இது 'மெய்' என்று கூறினேன்.

அதற்கு அவர் உமக்கென்ன தெரியும் "பொய்யான உடலை மெய் என்று கூறுவது மங்கல வழக்கே யொழிய வேறில்லை" என்றார்.

யான், "'அல்ல, அல்ல; 'மறைந்த உயிரைத் தனது வண்மையினாற் காட்டிப் பிறங்குதலின் மெய்' எனப் பெயர்" என்றேன். அதற்கு அவர் சிறிது சினத்துடனே "வீணய்யா வீண் விதண்டா வாதம்-உடலென்ன இந்த உலகமே ஒரு கற்பனை, கானலிற் காணும் நீர். எனவே இது உண்மையில் இல்லை" என்றார். யான் அவரைப் பார்த்து "ஐயா, கற்பனை, அறியாமைக் காலத்தில் தோன்றி அறிவு நிலையில் தோன்றா தது. இவ்வுலகமோ இரண்டு க... [torn]

...துந் தோற்றுதலின் இது கற்பனையுமல்ல, கானலிற் காணும் நீருமல்ல. மேலும், இல்பொருள் எவ்வாறு தோற்றும்?" என்றேன்.

இதைக் கேட்டதும், அவரிடம் முன்பெழுந்த சினம் வைரமாக மூண்டது. அந்நிலையில், அவர் என்னை ஒரு பொருட்படுத்தாமல் "நீ பக்குவமில்லாதவன், உனக்கு, மேலாம் பாமன் மான்மழுவாய் விளங்கி யுரைத்தும் விளங்காது" என்றார்.

யான், 'நில்லாதவற்றை நிலையின வென்றுணரும் புல்லறிவாண்மை கடை' என்றபடி, இவை ஒரு நிலையில் நில்லாதனவே யொழிய கற்பனையல்ல; ஆதலின், இல்லை என்பது முக்காலு மில்லை' என்று அழுத்தந் திருத்தமாக விடையளித்தேன்.

அப்பொழுது, அவர் உருத்திரனைப் போற் சீறி, கிணற்றுத் தவளைக்குக் கடல் ஆழமும் அகலமும் எப்படித் தெரியும்! குருகீதை ரிபுகீதை, ஈசுரகீதை இவைகளைப் படித்ததுண்டா? கைவல்யம், மாண்டுக்யம் இந்த உபநிடதங்களைப் பார்த்ததுண்டா? அல்லது விசாரசாகரம் போன்ற நூலின் பெயரையாவது கேட்டதுண்டா?" என்ற கேள்விகளை என் முன் அடுக்கடுக்காய் வைத்தார்.

யான் 'போதும் நிறுத்துங்கள். இவையெல்லாம் வெல்லாமல் மருட்டி வி... வகை வந்த வித்தை' என்றேன்.

எங்கள் [torn] இருவரின் உரையாடலை அ... [torn] ...றுமையோடு கேட்டுக் கொண் [torn] ...ர் நண்பர் அவரைப் [torn] ...ட்டு மிரண்டும் அ... [torn] ...மக்கென்ன [torn] ...வாரும்" என்று [torn] ...ர்.

அதைக்கேட்ட எனக்கும் சினம் கரை கடந்து விட்டது. உடனே அந்த நண்பரைப் பார்த்து "இது ஒன்றும் அவ்வளவு கடினமல்லவே! ஐந்து வயதுக் குழந்தையும் தயங்காது தவறாது விடை சொல்லுமே!" என்றேன். அவர் மறு முறையும் என்னை நோக்கி, அதை யறியும் வயதும் அறிவும் இன்னும் உனக்கு வரவில்லை என்று சொல்லி எழுந்து விரைவில் சென்று விட்டார்.

அவர்கள் சென்று விட்ட பிறகு அதைப்பற்றிச் சிந்தித்தேன்; ஔவையார் 'எட்டேகால் லட்சணமே' என்று மறை பொருளில் கூறியது போல் இதற்கும் ஏதாவது உட்பொருளிருக்கும் என்ற எண்ணம் எழுந்தது. அறிய அவாவுற்றேன், சித்தர்களைத் தேடினேன். புராணங்களைப் புரட்டி

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

நஞ்சன்கூடு பல்பொடி.
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்7,
4, பந்தர் தெரு, :: சென்னை

மருத்துவம்

உரு. தெய்வ அறுமுகனுர்.

மருத்துவம் ஒப்பற்ற தனிக்கலை. உடலின் நோயகற்றல், நோய் வராமல் தடுத்தல், உடலழியாமல் நிலைப்பித்தல் என்பன மருத்துவத்தால் பெற முடியும். பிணி, மூப்பு, சாக்காடு நீக்கியவர்கள் சித்தர்கள். இவர்களால் தமிழில் பாடிய நூற்கள் பல. அவற்றுள் மருந்து, மந்திரம், ஒளிநிலை, வளிநிலை, உலோகம், பாடாணம் (நச்சு) இவைகளை நீற்றல் ஒன்றோடொன்று கூட்[illegible], ஒன்றை மற்றொன்றாய் மாற்றல், [illegible]ானம் ஆய கலைகளைக் கூறியிருக்கின்றனர்.

நம் நாட்டின் தட்ப வெப்ப நிலைக்கு உரியவாறு மூலிகை, கடைச் சரக்கு, நச்சு, உலோகம், இரத்தினம் இவைகளால் சுண்ணம், செந்தூரம், மாத்திரை, எண்ணெய், திராவகம் முதலியவைகளைப் பாகுபாடு செய்து உடலின் குணமறிந்து நாடி கண்டு எண்வித சோட்டங் (அஷ்டவிதப் பரீட்சை) கண்டு மக்களுக்கு மருந்து கொடுக்கும் முறையைச் செவ்வனே விளக்கி யுள்ளார்கள்.

சித்தர்கள் நம் நாட்டின் தலைவர்கள். உடல் சித்தியும், உயிர் முத்தியும் அடையும் மார்க்கத்தினைக் கண்டவர்கள், வழி வழி வரும் மக்களுக்கு நேர் முகமாகவும் நூல் முகமாகவும் விண்டவர்கள், உடலை ஓம்புவதற்கு மருந்தின் உண்மையை விளக்கிக் கூறியவர்கள். மக்களாய நாம் அதனைக் கடைப்பிடித்து மருந்தின் வகை கண்டு, உடலின் நோய் தெரிந்து, மருந்தை உண்ண வேண்டும். மருந்தின் வழிதான் (கலப்பு) இப்போது உலகை அழிக்க ஏற்பட்டிருக்கும் அணுக்குண்டிலுள்ள பொரு[illegible]ாகும். (இவை விஞ்ஞான மென் [illegible]மூலிகை, கொடி, செடி, வேர், [illegible] இவைகளில் உப்பு, பாடா[illegible]லோகம், இரத்தினம் போன்ற [illegible]கள் விரவிக் கிடக்கின்றன, [illegible]ருகக் கொடிவல்லாரையில் தங்கமும், முள்ளங்கியில் தாமிரமும், அலரி விதையில் பாஷாணமும் நீர் மேல் நெருப்புப் பூண்டில் அக்கினித் திராவகமுமாகப் பல பொருள்கள் மிகுந்திருக்கின்றன. மக்களுக்கு நோயகற்றவும், பைத்தியம் (குணம் மாறுதல்) உண்டு பண்ணவும், நீக்கவும் மருந்தினுல் செய்யக் கூடும். ஆகலால் இயம, நியமங்கட்கு உணவில் இன்றியமையாது கீரை முதலிய மரக்கறி ஆகாரமே கொண்டால் உடலைச் சுத்தி செய்து மனத்தைத் திடப்படுத்தி அறிவை நிலை நிறுத்தி வளிநிலை முதலியன பழகச் சிறப்புடையதாக இருக்கின்றது.

மனேலயமடையப் பழகுவோர் கையாந்தகரை, நெய், (கரிசலாங் கண்ணிச்சாறு ஒரு பலம், பசு நெய் ஒரு பலம்) இவைகளிரண்டும் கூட்டி, வெயிலில் வைத்து அல்லது அடுப்பேற்றிச் சிறு தீயாகக்காய்ச்சிப் பதத்தி லிறக்கி வைத்துக்கொண்டு அதிகாலையில் உண்ணுக்கிலும் அண்ணுக்கிலும் கட்டை விரலால் சடவி வரக் கபம் சோழை அற்றுச் சுழிமுனை நோக்கத்திற்கு வாசல் வழி திறக்கும்.

கேளப்பா முந்தி முந்தி வழிலை
மார்க்கம் கெடியான
வாங்கிறதோர் வரிசை சொல்வேன்
நீளப்பா பெருவிரலிற் கரிச்சாலைச்
சாறு
நெய்யோடே மத்தித்துப்
பூசிக்கொண்டு
சூளப்பா அண்ணுக்கில் விரலை
யோட்டிச்
சுழட்டையிலே கபாலத்திற்
கபமெல்லாம் வீழும்
நாளப்பா நாளுதயத்திற்
செய்வாயாகில்,
நலமான குணத்தை யினி
சொல்லுறேனே.

எனச் சட்டமுனி கற்பம் நூறில் கூறியுள்ளது. அதிகாலையில் கரிசராங் கண்ணி, தூதுவேளை, வல்லாரை இவைகளின் ஏதேனும் ஒன்றின் இலைகள் ஒன்று, மூன்று அல்லது ஐந்து உட்கொள்ளலாம். இதுவும் கூடாதவர்கள் கரிசராங்கண்ணி வல்லாரை இவைகளின் சம்மூலத்தை நிழலில் உலர்த்தித் தூள் செய்து சமனெடையும் இதற்கு நேரெடையாகச் சர்க்கரையும் கலந்து காலை அல்லது மாலையில் திரிகடி வீதம் உட்கொண்டு வந்தால் உடல் சுத்தியும் அறிவு விளக்கமும் இன்னும் பல நன்மைகளு முண்டாகும்.

மக்கள் கதியடைய வேண்டுமானுல் மருந்தின் வகை கண்டு கல்பம் முதலியவைகளைக் கொள்ள வேண்டும். அல்லது கூடுமான வரையில் இதில் மேல் சொல்லப் பட்ட நெய், தூள் இவைகளை உண்பதோடு, பிரணவம், ஐந்தெழுத்து, ஆறெழுத்து, எட்டெழுத்தாகிய மந்திரங்களையும் குரு முகமாகவேனும் அல்லது தங்களுக்குத் தெரிந்த வரையில் ஏதேனு மொன்றை எழுத்து, ஒலிப் பிழையின்றி ஒவ்வொரு நாளும் ஓதிவரவும். நேர்ந்தழி பின் விரிக்க விழைகின்றேன். மருத்துவம் ஓங்குக!

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
[illegible] முதலியார் ஸ்டோர்ஸ்
[illegible] சென்னை 1.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

கிளை 3	கர, ஆவணி, 21-9-51 வெள்ளி	தளிர் 49

கட்சியும் ஆட்சியும்

இந்திய அரசியல் இப்போது மக்கள் அரசியலாக உள்ளது. உலகமே பெரும்பாலும் மக்களாட்சிக்கு இடந் தந்துள்ளது. மக்களால் அதிகாரம் பெற்ற மக்கள், மக்களுக்காக ஆட்சியெனுந் தொண்டு புரிதல் 'மக்களாட்சி' எனப்படுகின்றது.

நாடு அறிவறிந்த மக்களைப் பெரும்பாலும் பெற்றுள்ளபோது, ஆட்சி இங்ஙனம் சிறக்கும் என்பது வெளிப்படை; அத்தகைய மக்களைப் பெற்றுத் திகழ்வதற்கு, ஆட்சியுடன் கட்சியும் வேண்டப்படுகின்றது.

கட்சி, ஆட்சியைவிட மேம்பட்டது; காரணம், ஆட்சியையும் மக்கள் வாழ்க்கையையும் ஒருங்கே ஒழுங்குபடுத்தி இயக்குவது கட்சியாகும்.

மக்களை அறிவறிந்த மக்களாக மாற்றுவதற்கும், தோன்றும் மக்களை அறிவறிந்த மக்களாகத் தோற்றுவிப்பதற்கும், வாழ்க்கை நலனை மேம்படுத்துவதற்கும் நல்ல கட்சி நாட்டில் வேண்டும்; அக் கட்சி நாட்டில் இங்ஙனம் பணியியற்றுவதோடு, ஆட்சியையும் நன்கு இயங்கவைத்து நலம் புரியும். இங்ஙனம் மக்களையும் ஆட்சியையும் இயக்கும் திறன் படைத்ததாய்க் கட்சி சிறப்புறுகின்றது.

மக்கள் நல் வாழ்க்கைக்காக ஆட்சி பணி புரிகின்றது; வாழ்க்கை நடத்துவோர் மக்கள்; அவர்கள் நெறிதவறுங் காலங்களில் நன்னடையில் இருத்துவது ஆட்சி; ஆகவே, ஆட்சித்துறை என்னும் அரசியல் துறை யாவது முதன்மையாய் நன்னடைத் துறையே ஆகும்.

ஆனால், கட்சி என்பது இங்ஙனம் ஒரு துறைப் பணி புரிவதன்று; ஒரு துறைப் பணி புரியும் அரசியலை நெறிப்படுத்துவது மட்டுமன்று; அதன் கடமைகள் பல.

வாழ்க்கையென்பது பொருள் நலம், கலைநலம், அறநலம், பெருநலம் என்னும் பல துறைகள் அமைந்தது. வாழ்க்கை நலம் என்னும் இவ் வெல்லா நலங்களிலும் வழி காட்டுவதும் துணை புரிவதுமாகக் கட்சிக்குப் பல கடமைகள் உண்டு. கட்சியின் வழி நின்று ஆட்சி தனக்குரிய கடமையை அதிகார வலிமையுடன் இனிது நிறைவேற்றி வரும். கட்சியின் அதிகாரச் செயற்குழுவே, ஆட்சிக்குழுவென்பது. அது, கட்சியினின்றும் உருவெடுத்துத் தோன்றி இயங்குவது.

எனவே, கட்சிதான் நாட்டின் நலனுக்கு இன்றியமையாத தொன்று; கட்சியின் தலைவர், நாட்டின் தலைவராவர்.

மக்கள் நல்வாழ்க்கைத் துறை பலவற்றிற்கும் பொறுப்பும் இயக்கமுமுடைய கட்சி என்பது, பெரும்பாலும் இப்போது 'அரசியல் கட்சி' என்றே வழங்கப்பட்டு வருகின்றது. அரசியல் மட்டும் கட்சியின் கடமையன்று என்பது, மேலே கூறி வந்த விளக்கங்களால் இனிது விளங்கும். கட்சி என்னும் சொல்லுக்கு 'நோக்கம்' (லக்ஷியம்) என்பது பொருள். நோக்கம் பொதுவாக வாழ்க்கையியலைப் பற்றியது; வாழ்க்கை யியலின் துறைகள் பலவற்றுள் அரசியல் என்பதும் ஒன்று. ஆதலால், கட்சி என்பது அரசியலுக்கு மட்டும் உரியதென்பது பொருந்தாது.

மன்பதையின் வாழ்வியல் நலம் முழுவதையும் நோக்கிப் பார்க்கும் கட்சியென்பது இ[illegible]யற்றதொரு நல்லமைப்பாகும்; பிறர்க்கென வாழும் பெற்றியோ[illegible]ரால் அது உருவுற்றுச் செயற்படுவது. நல்லவற்றை யெல்லாம் தனது கடமையாகக் கொண்டு பணியே செயலாய் விளங்குவது. இத்தகைய தூய மன்பதைத் தொண்டின் அமைப்பன்றோ 'கட்சி' என்பது. அதனைச் 'சான்றோர் நிலைய'மென்றே கூறலாம். நல்லவை யெல்லாம் கடமையாக உடையோர் சான்றோரே என்பது,

"கடனென்ப நல்லவை
யெல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள்
பவர்க்கு"

என்னுந் தெய்வத் திருக்குறளால் தீர்மானிக்கப்படுகின்றது. குணநலம் சான்றோர் நலமாதலின், அந்நலத்தின் அடிப்படையிலேயே கட்சி உருவாதல் வேண்டும். அப்போதுதான் அதிலிருந்து எழுகின்ற ஆட்சியமைப்பும் தூய்மையும் நலமும் ஆற்[illegible]லும் வாய்ந்ததாய் மேம்ப[illegible] உலகுப் பயனுள்ளதாய்த் திக[illegible]

நாட்டில் சான்றோர் [illegible] விளங்கும்போதுதான் நல்[illegible]சியும் நல்ல ஆட்சியும் எழும், சான்றோரே நாட்டை இயக்குநர்! சான்றோரே நாட்டுக்குத் தலைவர்! சான்றோரையே நாடு நாட வேண்டும்!

பெரிய புராணம்

புனித நெற்றியில் நீறு பொலிவெய்த, தண்ணிலவு முதிர்ந்து சாய்ந்தது போல நரைத்த வெண் சடை இடுப்பு வரையில் பின்னே தொங்க, காதில் கண்டிகை தாழ, மார்பில் முந்நூலும் தோளில் வெண் துண்டும் அசைய, கையில் வெயில் மறைக்குங் குடை ஒன்று விளங்க, மிகப் பழைய சரிந்த உடை இடையில் அழகு செய்ய, மற்றொரு கையில் தருப்பையும் வெண் துகிலும் நுனியிற் கட்டிய மூங்கில் தண்டு தாங்கி, 'இது அழகு மூத்த வடிவமோ அல்லது மூப்பு என்னும் வடிவமே இது தானோ அல்லது மெய்ந்நெறியாகிய வைதிகச் செம்மையின் நிலைக்களனோ' என்று பலரும் ஐயம் கொள்ளும்படி தள்ளு நடை கொள்ள ஓர் அந்தண முதியோர் கோலத்துடன் திருமாலும் நான்முகனுங் காணாச் சிவபெருமான் திருமணப் பந்தரிடையே நம்பியாரூரரின் எதிரில் சடங்கு நிகழ்த்தும் அவையினர் முன் தோன்றினார்.

தோன்றி, முன்னை வேதங்கள் ஆயிரம் திருவாய் மலர்ந்த இறைவன், 'நான் சொல்லுவதை எல்லாரும் கேளுங்கள்' என்று வாய்திறந்து ஒரு வார்த்தை கூறினான். கேட்ட அந்தணர் அனைவரும் மணச் சடங்கு மேற்கொண்ட மங்கலச் சிங்கமாகிய நம்பியாரூரரும், பெரியவர் வரவுக்கு மகிழ்ந்து, 'உமது நல்வரவு நல்லது; எங்கள் தவமே இந் நிகழ்ச்சி; நீங்கள் சொல்ல விரும்புவதைச் சொல்லுங்கள்' என்றனர்.

ஆண்டவன் நாவலூர் பெருந்தகையை நோக்கி, 'எனக்கும் உனக்கும் பொருந்திய ஓர் இசைவினால், முன்னிருந்தே தொடர்ந்துவரும் ஒரு பெருவழக்கு நமக்குள் உண்டு; அதனை நீ முடித்துவிட்டு அதன்பின் நினது மணச்சடங்குக்கு முயற்சி செய்' என்றார்.

நிகரற்ற பெருங் குணம் வாய்ந்த நம்பியாரூரர், அதனைக் கேட்டு, மணச் சடங்குக்குத் தடை வந்ததே என்று கருதாமல், 'என் தொடர்பான வழக்கு உங்களிடம் இருப்பதானால் அதனை முதலில் முடிக்கவே விரும்புகிறேன்; அதனை முடித்தன்றி, மணவினைக்கு முயல்வதில்லை; ஆதலால் வழக்கு இன்னதென்பதை முழுமையும் சொல்லுங்கள்' என்று கேட்டுக்கொண்டார்.

எல்லை முடிவில்லாத இறைவன் அங்கிருந்த அந்தணரை நோக்கி, 'என் வழக்காவது இதுதான், கேளுங்கள்; நாவலூரைச் சேர்ந்த இந் நம்பியாரூரன் எனக்கு அடியவன்; இதுதான் நான் சொல்வது' என்று சொன்னான்; தேவரையும் மால் அயன் முதலிய ஆட்சித் திரு படைத்த யாவரையும் தனக்கு வேறு வகையில் அடிமையாக உடைய முதல்வன் இவ்வாறு கூறினான்.

இது கேட்டவுடன், அங்கே நாலா பக்கமும் நின்றிருந்தவர் அமர்ந்திருந்தவரெல்லாரும், 'இம் முதியோன் என்ன நினைத்து விட்டான்' என்று சினங்கொண்டு சிலர் வெளியே சென்று விட்டனர்; சிலர், எள்ளனமாகச் சிரித்தனர்; திருநாவலூரார், 'இவ் வந்தணன் மொழி நன்றுதான்' என்று கூறி நகைத்தார்.

நகையாடிய நாவலூராரின் முக நோக்கி, யார்க்கும் மிக்கோனாகிய ஆண்டவன் தனக்கு நேர்ந்த இழிவு தாளாமல் உடல் நடுக்கங்கொண்டு நெளிந்து, சரிந்த மேல் ஆடையை எடுத்துத் தோள் மேல் இட்டுக் கொண்டு சற்று முன் சென்று, 'உன் தந்தைதன் தந்தை அக்காலம் தந்த ஆள் ஓலை இதோ என் கையில் இருக்கிறது, நான் ஆதாரமில்லாமலா சொல்லுகிறேன், சான்றோடு கூடிய இச் செயலை எட, நீ எள்ளனமாக எண்ணிச் சிரித்தது என்?' என்று கேட்டார்.

பழுதற்ற நற்குடியில் வந்த நம்பிகள், வேதியன்பால் அன்பு மீதூர்ந்தும் சிந்தை தளர்ந்தும் எள்ளனச் சிரிப்பு நீங்கி, 'பிறவிவேர் அறுக்கும் அந்தணர்கள் வேறோர் அந்தணற்கு அடிமையாதல் வழக்கில் உண்டா? இன்றுதான் புதிய முறையில் இதனை நீர் பேசக் கேட்டோம்; நீர் பித்தர் போலும்' என்றார்.

'நான் பித்தனே ஆகட்டும், அல்லது பேயனே யாகட்டும்; இன்னும் நீ எத்தனை வசைகள் சொன்னாலும் அதற்காக நான் ஒன்றும் பின்வாங்க மாட்டேன், அவ்வளவுக்கும் என்னை நீ ஒன்றும் அறிந்து கொள்ளவில்லை. வீணாக இங்கே நின்று வாதங்கள் பேசிக்கொண்டிருக்க வேண்டாம்; வந்து பணி செய்ய வேண்டும்' என்று அந்தண முதியோர் தீர்மானமாகக் கூறினார்.

பெரியவரின் முதிய அருள் வடிவத்தால் உள்ளம் அன்பு பெருகி உருக்கங் கொள்கின்றது; ஆனால் அவர் வாயிலிருந்து வெளிவரும் பித்த வார்த்தையோ கோபத்தை உடனே உண்டாக்குகின்றது. ஆயினும், வழக்கை முடிக்கக் கருதித் திருநாவலூரர், ஆள் ஓலை ஒன்று உண்டு என்னும் உண்மையை அறிய வேண்டும் என்று கருதியவராய், அப் பெரியவரை 'ஓலை காட்டுக' என்றனர்.

'ஓலையை நீ காண முடியாது; அறம் உரைக்கும் அவையோர் முன் காட்ட, அவர் செய்யும் தீர்ப்பின் மேல், பணி செய்வதே நினது கடமை' என்று முதியோர் கூற, நம்பியாரூரர்க்குச் சினம் மூண்டு விட்டது; உடனே, அவ்வோலையைப் பறிக்க, மேற்சென்று அவரைப் பற்ற முயன்றார்.

காங்கரசு கட்சிக்குக் காந்தியடிகள் போன்ற சான்றோரால் புத்துயிரும் ஆற்றலும் வளர்ச்சி
ம் பயனும் உண்டானமை யாவ
அறிந்தது! சான்றாண்மை
ருத்தும் மதிப்பும் இல்லா
சியில் இருத்தற்கு உரிய
ரைச் சேர்த்து
ம்
க

உறுப்புகளின் - - - - பயன்

'நிலவு'

நாம் பிறந்தது எதற்கு? நாம் இவ்வுலகில் வாழ்ந்து வருவது எதற்கு என்றும், நம்மால் இவ்வுலகிற்கு என்ன நன்மை செய்ய முடியும் என்றும், நமக்கு அறிவு விளங்கும் வயது வந்தது முதல் நாம் சிந்தித்து ஆராய வேண்டும்.

ஓர் எண்ணம் மட்டும் உறுதியாக ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும்; 'யான், ஏதாவது பயன்படக் கூடிய காரியத்தை என் வாழ்நாளில் பொது மக்களுக்குச் செய்யவேண்டும்' என்பது. உறுதி இருந்தால், அவ்வெண்ணம் நிறைவேறும்.

- அவ்வாறு எண்ணியதை நிறைவேற்றி மறைந்தனர், காந்தி அண்ணல். இப்போது, நினைத்ததைச் செயலில் செய்து வருபவர் நம் ஆசிரியர் இளவழகனார்.

நாம் இவ்வுடலை வளர்ப்பது எதற்கு? நன்றாக அழகு படுத்திப் பார்ப்பதற்கன்று, அழகிய ஆபரணம் அணிவதற்கன்று, உயர்ந்த உடைகளை உடுப்பதற்கன்று, வாசனைத் திரவியங்களும், நிறமற்ற பொடிகளும் பூசி மகிழ்வதற்கன்று; வேறு எதற்குத்தான் என்றால், பயன்பட உழைத்து உண்மை நெறியில் ஒழுகுவதற்குத்தான். தற்காலத்தில் எத்தனையோ பேர்கள் வேறு வழிகளில் தங்கள் உடலின் உழைப்பைத் திருப்ப முயல்கின்றார்கள். வளர்ச்சி செய்கிறார்கள். ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு கட்டளையுண்டு. வேறு விதத்தில் பயன்படுத்தினால் அதன் உண்மைச் சக்தி இழந்து விடுகிறது.

ஞாயிறு தோன்றும் நேரத்தில் திங்கள் தோன்றிப் பிரகாசிக்குமா? முகர்ந்து அறியும் உணர்ச்சியைக் கண் அடைய முடியுமா? பார்த்தறியும் தன்மையைக் காது பெற முடியுமா? இதைப் போலவேதான் உடலின் உழைப்பைத், தவறாகச் செலுத்தினால் இயற்கைப் பயன் பெற முடியாது.

நல்ல துறையில் உடல் உழைப்பைத் திருப்ப வேண்டும். அதற்குத்தான் சில இயற்கைப் பாதுகாப்புடன் உடல் அமைந்திருக்கிறது. முன் காலத்திலிருந்த நம் முன்னோர்கள் வாழ்க்கைக்குத் தேவையான உழவு முதலிய தொழில்களைச் செய்து வந்தார்கள். எங்கெந்த இடமோ காலால் நடந்து சென்றார்கள். நல்ல உடல் வலிமையைப் பெற்றிருந்தார்கள். இது, இயற்கை முறையில் பெறும் உடல்வலிமை.

தற்காலத்தில் சிறிதளவு தூரம் கூட நடப்பது கிடையாது. நடந்து செல்வது நாகரிகக் குறைவு என்பது சிலர் கருத்து. மேலும் எங்குச் செல்ல வேண்டுமாயினும் அநேக விதமான வண்டிகள் இருக்கின்றன. இதனால் உடல் வலிமை குன்றி விடுகிறது; நாம் வியாதியினால் பீடிக்கப் படுகிறோம். நாம் செல்லவேண்டிய இடத்திற்கு நடந்து செல்லாமையால், இதற்காகத் தனிப்பட்ட நேரத்தில் அதாவது காலை அல்லது மாலை (walk) உலாப் போக வேண்டுவது அவசியமாகிறது. பயனுள்ள மற்றொரு செய்கை அதனால் இழந்து விடுகிறது. பொழுதும் வீணாகக் கழிக்கப் படுகிறது.

உடல் வளைந்து நடப்பது விலங்கு. உடல் நிமிர்ந்து நடப்பவர் மனிதர் என்பார்கள். இயற்கையில் சிலர் கூன் பிறவியாகப் பிறக்கின்றார்கள்; அவர்களைப் பற்றி நாம் சொல்லப் போவதில்லை. சிலர் நல்ல பிறவி எடுத்த போதிலும் தன் உடலை வளைத்து அமர்கின்றார்கள், நடக்கின்றார்கள். நன்றாக நிமிர்ந்து வளர வேண்டிய உடலைக் குறுக்கி வளைத்தால் நம் வலிமை குன்றி விடுகின்றது. வலிமை குன்றுவது மட்டுமன்றி நம் எண்ணமும் குன்றிவிடுகின்றது.

நாம் எண்ணும் கருத்துக்கள் மேன்மையாக உயர்ச்சி பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் ஆண்டவர் நம் உடலுக்கும் மேல் நோக்கி வளரும் சக்தியைக் கொடுத்திருக்கிறார். ஆனால் விலங்குகளுக்கு மேல் நோக்கி வளரும் சக்தி இருக்கிறதா? இல்லை. இவை குறுக்கில் அதிக வளர்ச்சி அடைகின்றன. உயரத்தில் அதிகம் வளர்வதில்லை. இதன் காரணம் இதற்கு உயர்ந்த கருத்துக்கள் இல்லை என்பது நன்றாகப் புலப்படுகிறது. நம் உடல் சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்று அநேக விதமான பொருள்களையும், மருந்துகளையும் தின்று வலிமை பெறுகிறோம். எல்லோருக்கும் இனியவை செய்வதற்குத்தான் இயற்கைப் பாதுகாப்புடன் இவ்வுலகில் நாம் பிறந்திருக்கிறோம்.

நம் எண்சாண் உடலுக்குச் சிறந்தது சிரசு. சிரசில்தான் நமக்குத் தேவையான முக்கிய அவயவங்கள் அமைந்திருக்கின்றன. அவைகளில் மிக மென்மையானது கண். இது அமைந்திருக்கும் நோக்கத்தின் தத்துவத்தை ஆராய்ந்தால் மிக வியப்பாக இருக்கிறது. கண் எதற்காக அமைந்தது? ஆடம்பர வாழ்க்கை வாழுபவரைக் கண்டு பொறாமை கொள்வதற்கன்று, மின்சார விளக்கின் பிரகாசத்தைப் பயன் நுய்ப்பதற்கன்று, சினிமாவைக் கண்டு அதுபோல் தன் வாழ்க்கையை மாற்றி வாழ்வதற்கன்று. இன்றியமையாத உண்மையைக் கண்டு களிப்பதற்காகும். கண் இமைப்பதின் காரணம் பார்க்கத்தகாத போது மூடிக் கொள்வதற்குத்தான் இமைகள் கண்ணை மூடிக்கொள்கின்றன.

(வரு...

Telegrams: "RAMB...

N. Ram... B...

1. வள்ளுவப் பெருந்தகையார் வான் சிறப்பில் மழை நல்ல உணவுகளை உண்டாக்கித் தந்து தானும் உணவாய் நிற்கின்றது என்று அருளுகின்றார். அந்த உணவு மரஞ் செடி கொடிகள் தருகின்ற இலை காய் கனி முதலியனவே என்பதுதான் எல்லார்க்கும் ஒப்ப முடிந்தது. இதை மறுப்பார் யார்?

2. நம்மில் புலால் உண்பவர்கள் பெரும்பாலும் புலால் உண்ணாத உயிர்களையே கொன்று தின்கின்றனர். கொல்லப்படும் உயிர்கள் எவற்றைத் தின்று தமது உடல் நலத்தைப் பெருக்கிக் கொள்கின்றனவோ அந் நலத்தை, நாம் அவ்வுயிர்களின் தூய்மையற்ற உடலைத் தின்று அரைகுறையாகவும் பல கெடுதல்களும் பெறுவதை விட, நேரே அவ் வுயிர்கள் உண்ணும் மரக்கறி உணவுகளை உண்டு நன்கு பெறலாமல்லவா?

3. புலால் உணவினால் நலம் உண்டென்றாவது, ஓரளவு உண்டெனினும் அதனால் கெடுதலே இல்லை என்றாவது எந்தப் பெரிய மருத்துவரேனும் சொன்னதுண்டா? சொரி, சிரங்கு முதலிய தோலைப் பற்றிய நோய்கள் பெரும்பாலும் புலால் உண்பார்க்கே வருகின்றன என்றும், மரக்கறி உண்பார்க்குப் படும் காயங்களும், வரும் சொரி சிரங்குகளும் விரைந்து ஆறி விடுகின்றன என்றுமாவது நீங்கள் அறிவீர்களா?

4. மரக்கறி உணவே உடம்புக்கு நல்ல வலிமையையும், பளபளப்பையும், மென்மைத் தன்மையையும் நல்கும். புலாலுணவு, நமக்குச் சிறிதும் தேவையில்லாத கொழுப்பையே மிகுதிப்படுத்தி முரட்டுத் தனத்தையும் உண்டாக்கும். இவ் வுண்மைகளைப் புலாலுண்ணும் புலி சிங்கம் முதலியன எவ்வளவு பழக்கப்பட்டாலும் கொடூரத்தன்மையை உடையவைகளாய் எவ்விதமான வேலைகளுக்கும் பயன்படா திருப்பதையும், நேர்மாறாக மாடு, குதிரை, யானை முதலியன இயல்பிலேயே அமைதியாக இருப்பதோடு பலவகையான வலிய வேலைகளையும் செய்து உதவுவதையும் கண்டாவது தெளியலாகாதா?

எண்ணிப் பாருங்கள்!

(ஆடலரசு)

5. மரக்கறி உணவே உயிரினங்களின் வளர்ச்சிக்கும் மிகவும் உகந்தது. இவ்வுண்மையைப் பல குட்டிகளைப் பெற்றெடுத்தாலும் புலால் உண்ணும் உயிரினங்கள் அருகி எங்கோ ஒன்றாக இருப்பதையும், ஓரிரு கன்றுகளையே ஈன்றாலும் புலாலுண்ணாத உயிர்கள் மந்தை மந்தையாக இருப்பதையும் பார்த்து அறிதல் கூடாதா?

6. அன்பிலும் அமைதியின்பத்திலும் நமக்கு நாட்டமிருந்தால் புலாலுண்ணாத உயிர்கள் மட்டும் அப்படியிருப்பதை நேரே பார்க்கிற நாம் புலாலுணவு கொள்ள மனங் கொள்வோமா? புலாலுண்ணும் வழக்கம் குறைந்தால் நாட்டில் நடைபெறும் கொலையும் குழப்பமும் குறையும் என்று சான்றோர்கள் கூறவில்லையா?

7. மனிதனின் கை, கால், பல், குடல் முதலிய உறுப்புக்கள் புலாலுணவு கொள்ளும் உயிர்கட்கு இருப்பன போலவா இருக்கின்றன?

8. உயிரினங்களில் மரம், செடி, கொடிகளை மட்டும் மனிதன் தன் முயற்சியினால் மிகுதிப் படுத்திக் கொள்ள முடிகிறதே அது என்?

9. உண்மையில் நமக்குக் கடவுள் நம்பிக்கையும், தூய்மையில் நினைப்பும், வன்மை மிக்க மென்மையில் விருப்பும் இருந்தால், வேறு உயிர்களை, நம்மிலும் இழிந்த உடலுடையவைகளைக் கொன்று தின்ன முடியுமா? மனம் வருமா? இறைவன் படைப்பில் ஒரு வேறுபாடும் இல்லாதபோது 'புலையன்' என்று நம்மை ஒத்த சில மனிதர்களை விலக்கி வைக்கும் நாம் புலாலுணவு கொள்வது முறையா?

10. செடி கொடிகளும் உயிர் உள்ளனவே எனினும் நம்மால் முடிந்த வரை அறிவான் [illegible] உயிர்களை அழிக்காமல் இ[illegible]ம், செடி கொடிகளிலும் அவ[illegible] பாகங்களாகிய காய், கனி, இலைகளை மட்டுமே கொண்டும், இதனால் வரும் தீவினைகளையும் போக்கிக் கொள்ள முடிந்த வரை தக்கார் ஒருவருடன் இருந்து உண்டும் வரலாகாதா?

குறிப்பு :—காந்தியடிகள் நினைவிற்காகத் தம் வாழ்வில் திருத்தங்கள் செய்து கொண்டோர் பலர். அவருள் நம் சென்னை மாநில அமைச்சராயிருந்த "தானியல் தாமசு" என்னும் கிறித்தவர் 'இனிப் புலாலுண்பதில்லை' என்று உறுதி செய்துகொண்டு வாழ்ந்தமை பெரிதும் பாராட்டற் குரியது.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

னேன், மந்திரத்தை ஓதினேன், எனினும், விடை என் கண்ணிற் படவில்லை. முயற்சியை விட்டு விட்டேன்.

ஆயினும், அச்சாணியன்ன அச் சொல் என் மனத்தை வருத்திக் கொண்டேயிருந்தது. ஒரு நாள் திருவாசகத்தைப் பிரித்த பொழுது எதிர் பாராத விதமாக ஒரு செய்யுள் என் கண்ணிற் பட்டது. அச் செய்யுள் இவ் வினாவிற்கேற்ற விடையாக அமைந்ததைக் கண்டு பெருமகிழ் வெய்தினேன். அச் செய்யுள் வருமாறு:

"கட்டறுத் தெனையாண்டு கண்ணார நீறிட்ட அன்பரோ டியாவருங் காணவே பட்டி மண்டப மேற்றினை யேற்றினை எட்டினோடிரண்டும் அறியேனையே" இதன் உட்பொருளும் ஒருவாறு தெரிந்துகொண்டேன்.

பொருள்: அ ÷ உ = ய. பத்து தமிழில் 'ய'காரத்தைப்போல் எழுதப்படுவது. 'ய'காரத்திற்கு மறை பொருள் உயிர் என்பதாகும்.

ஆணவ மலத்தினாலே கட்டுண்ட மனிதன் உடலுக்குப் பிறிதாய் உயிரொன்றுள்ளது என்றறியுந் திறனுமற்றவனாயிருக்கின்றான். இத்தகையவனை 'எட்டு மிரண்டும் அறியாத மூடன்' என்ற குறிப்புச் சொல்லால் அழைப்பது பண்டை மக்களின் வழக்கம். அவ் வழக்குச் சொல் தொன்று தொட்டு இன்று வரை நம்மிடை அழியாது இருந்து வருகிறது. இது, ஒரு வகைப் பொருள்.

கார் வழிபாடு

(சி. து. க.)

வருக மழையே நீ வையமெலா மின்பம்
பெருக வுளமுருகிப் பெய்க—திருகுமுளக்
கோட்டமெலா நீங்கிக் குவலயத்தில் மக்களெலாம்
ஈட்டமாய் வாழ விசைந்து.

பெய்க முகிலே! நின் பேருளை யாமறவேம்
உய்வென வெங்கட் குரையாயோ-பொய்கைமுதல்
ஏரிமடு நீர்நிலைகள் எல்லாமும் வற்றினவால்
வாராயோ நீர்சுமந்து வான்.

கன்னிப் பசுமைக் கவினார்ந்த நாடெல்லாம்
வன்னியிற் பட்டனபோல் வாடியவே—மின்னியெழில்
வான்வெளியில் வந்தெமர்தம் வாட்டமெலாம் ஓட்டமுறச்
சூன்முகினீ பெய்க துணிந்து.

நீலத் திருவுருவி னேரிழையெந் தாயொக்குங்
கோலத் திருவுங் குலமுகிலே!—சீலத்தி
ன்மமை [illegible]போல் ஆருயிர்க்கு நீயிரங்குஞ்
செம்மை மறந்ததேன் செப்பு.

பசியா லுயிர்வருந்திப் பார்மிசையெல் லோருங்
கசியு மியல்பதனைக் கண்டும்—இசையாய்கொல்,
காரே!நின் வண்மைக் கருத்தெலா மாறிவிடின்
ஆரே யெமைக்காப் பவர்.

கொள்ளாமோ நின்னைக் குறைதீர மெய்தழுவி
யள்ளிச் செழுமுத்த மாடாமோ—உள்ளஞ்
செருக்கித் திரியாமோ செல்லே!யிங் குற்றல்
உறக்கருதா தென்னோ வுரை.

மின்னல் மிளிர்வேணி மேவுமிடி யாலுடுக்கை
தன்னுருவாற் றண்மிடறு தான்காட்டி—முன்னோன்போல்
இன்பத் தனிக்கூத்திவ் வேழையரேம் கண்டுணரத்
துன்பகல வான்முகிலே தோன்று.

கொடைமடம் பட்டாய்நீ கொள்கையினி லென்பார்,
நடைமடம் பட்டாய்கொ னல்லாய்!—இடைதெரிந்
தல்ல லகற்று மரிய குணம்போக்கிச்
செல்லே யொழிந்ததேன் செப்பு.

நல்லமிழ்தா நீர்சொரிந்து நானிலத்தை யோம்பாமல்
செல்லுவதுஞ் செல்லுனக்குச் செப்பமோ—முல்லையினாய்!
ஒல்லென் மழலை யொலிகொண் டிழிந்தெங்க
ளல்ல லகற்றி யருள்.

நெல்லருளி யெம்மை நிலையுறச்செய் தவ்வாறே
புல்லருளி யாக்கட் புரந்திடாய்—நல்லெழிலீ!
கண்கண்ட தெய்வமாக் காணக் கருதினேம்
எண்ணி யெழுக இசைந்து.

கொலையும் புலையும்

'கொல்லாமை' 'புலால் மறுத்தல்' என்னும் இரண்டும் ஒன்றற்கொன்று இயைபுடையன. புலால் உண்ணுதல் கொலை நிகழ்தற்கு ஒரு காரணமாய் உள்ளது; கொலை நிகழ்த்துவோர், கொன்ற உடம்பின் புலால் உண்ணுதலும் இயல்பாயிருக்கின்றது. ஆதலால், ஒன்றினின்று நீங்குங் கொள்கையுடையவர் மற்றொன்றினின்றும் நீங்கும் உறுதி பெறுவர். தெய்வத் திருவள்ளுவர் இவ்வியைபு கருதியே,

"தினற்பொருட்டால் கொல்லாது
உலகெனின், யாரும்
விலைப் பொருட்டால் ஊன்தருவார்
இல்"

எனவும்,

"கொலைவினைய ராகிய மக்கள்
புலைவினையர்"

எனவும் உரைத்ததுடன், தமது தமிழ் மறையின் விரதப் பகுதியில் முதலில் புலால் மறுத்தலும் இறுதியில் கொல்லாமையுங் கூறி இவ்விரண்டின் இடையே ஏனை நோன்புக் கொள்கைகளை வைத்து விளக்கிச் செல்கின்றார்.

திருமூலரும்
இவ்வியைபினை நினைந்து

"கொன்றிலாரைக் கொலச்
சொல்விக் கூறினர்
தின்றிலாரைத் தினச்சொலித்
தெண்டித்தார்"

என்று இரண்டையும் இணைத்துரைத்ததோடு, இவற்றின் அதிகாரங்களையும் அடுத்தடுத்து வைத்துச் சென்றார். ஆதலால், புலால் மறுத்தலை மேற்கொள்வோர்க்கு ஐம்பெருந்தீவினைகளுள் ஒன்றாகிய கொலைவினையைக் கொள்ளாத நிலையும் வாய்க்கும். கொலைவினை நீங்கவே ஏனைக் கள[illegible]ள் காமம் பொய் கூறல் என்னும் கு[illegible]ங்களும் குறையத் தொடங்கும். இக்கருத்தையும் புலப்படுத்தக் கருதி, திருமூலர், கொலையை முன்னிறுத்தி ஏனைக் குற்றங்களையும் ஒருங்கு தொகுத்துக் கொல்லாமை என்னும் அதிகாரத்திலேயே வைத்து அவற்றை நீக்குமாறு அறிவுரை கூறினர்.

"கொலையே களவுகள் காமம்
பொய் கூறல்
மலைவான பாதகமாம் அவை நீக்கி"

என்பது அவர் அருளுரை. 'கொல்லாமை எல்லாக் குணக்கேட்டையும் நீக்கும்" என்று தாயுமானாருங் கூறினர்.

புலால் மறுப்போர்க்கு இங்ஙனம் எல்லாக் குற்றமும் நீங்க இடமுண்டாதல் போல, புலால் உண்போர்க்கு இவ் வெல்லாக் குற்றமும் ஓங்க இடமுண்டாதலின், அதனை உண்போரை ஆசிரியர் 'புலையர்' என்றார். மக்களில் தாழ்ந்தவர் என்பவர் அதாவது புலைச்சாதி என்பவர் புலால் உண்போரே என்பது திருமூலர் கருத்து.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. ச. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)